
அரசியல் சிந்தனை நூல் வரிசை - 10



# வடகொரியாவும் சர்வதேச அரசியலும்

கலாநிதி கே.ரி.கணேசலிங்கம்
தலைவர், அரசறிவியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வெளியீடு: சமூகவிஞ்ஞான ஆய்வு மையம்

# முன்னுரை

சமூக விஞ்ஞான ஆய்வு மையம் மாதம் தோறும் வெளியிடும் அரசியல் சிந்தனை நூல் வரிசையில் பத்தாவது நூலாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியற் துறைத் தலைவர் கே.ரி.கணேசலிங்கத்தின் **"வடகொரியாவும் சர்வதேச அரசியலும்"** என்ற இச் சிறு நூல் வெளி வருகின்றது.

வடகொரியாவின் வரலாற்றுப் பின்னணி, அதன் பொருளாதாரம், இலங்கையுடனான அதன் உறவு, வட கொரியாவை மையப்படுத்திய புவிசார் அரசியல், அதில் சீனாவினதும் அமெரிக்காவினதும் பாத்திரம் என்பவற்றை மிகத் தெளிவாக நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

ஒரு சிறிய நாடு புவிசார் அரசியலை தனது பாது காப்புக் கவசமாக எவ்வாறு பயன்படுத்துகின்றது என்பதற்கு வடகொரியா சிறந்த எடுத்துக்காட்டு. இந்தப் பாதுகாப்புக் கவசத்தினால்தான் ஈராக் மீதும், லிபியா மீதும், ஆப்கானிஸ் தான் மீதும் சண்டித்தனம் காட்டிய அமெரிக்காவினால் ஒரு எல்லைக்குமேல் வடகொரியா மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

ஒற்றை மைய உலக ஒழுங்கு இருந்தபோது வடகொரியா நெருக்கடிகளை சந்தித்தது என்பது உண்மை தான். இன்று அந்த நிலைமை மாறி வருகின்றது. சீனா வின் அபரித வளர்ச்சி, ரஷ்யாவின் தேசிய உறுதி, ஈரானின் தந்திரோபாய நகர்வுகள் என்பன இன்று உலக ஒழுங்கை மாற்றி வருகின்றன. பெரிய சேதம் இல்லாமல் மென் அதிகார நகர்வுமூலம் சீனா இன்று உலகின் மூலை முடுக் கெல்லாம் செல்லத் தொடங்கியிருக்கின்றது.

வடகொரியாவைப் போல தமிழர் தாயகமும் புவிசார் அரசியலில் கேந்திர இடத்திலேயே இருக்கின்றது. தமிழகத்தின் கேந்திர இடத்தையும் இணைக்கின்றபோது தமிழர் தாயகத்தின் கேந்திரப் பலம் மிகவும் வலிமை யானது. துரதிஸ்டவசமாக இவை பற்றிய காத்திரமான உரையாடல் இன்னமும் தமிழ்ச் சூழலில் வளர்ச்சி பெறவில்லை.

புவிசார் அரசியல் விடயத்தில் வடகொரியா தமிழ் மக்களுக்கு வலுவான வெளிச்சங்களைப் பாய்ச்சும். இந்த வெளிச்சங்களைத் தரிசிக்க இந்நூல் அதிகளவில் உதவும் என்பது எமது நம்பிக்கை

வாசகர்கள் முன்னைய நூல்களுக்குத் தந்த ஆதரவு போல இதற்கும் தருமாறும் வேண்டுகின்றோம்.

நன்றி

சமூக விஞ்ஞான ஆய்வு மையம்
28,செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## வரலாற்றுப் பின்னணி

கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் கொரிய தீபகற்பத்தில் அமைந்துள்ள வடகொரியா தனித்துவமான நாடாக விளங்குகிறது. கொரிய மொழிக் குடும்பத்தினைக் கொண்ட கொரிய மக்கள் தென் மத்திய சைபீரியாவிலிருந்து படிப்படியாக குடியேறிய ஆதிவாசி களைக் கொண்டவர்களாக இருக்க முடியுமென அகழ்வாய்வுகளிலும் மொழி ஆராய்ச்சிகளிலும் உறுதிப்படுத்தப்படுகிறது. ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து சீனாவின் வடபகுதியிலிருந்து சீனர்கள் கொரியாவுக்குள் பிரவேசித்து குடிப்பரம்பலை ஏற்படுத்தியதாக வரலாறு கூறுகிறது. அக்காலப்பகுதியிலிருந்தே கொரியாவுக்கென வரலாறு வரையப்படுகிறது. பல்வேறுபட்ட சாம்ராச்சியங்களின் பிடிக்குள் அகப்பட்டும், நெருக்கடிகளை சந்தித்தும், எழுச்சியையும், வீழ்ச்சியை எதிர் கொண்ட கொரியத்தேசம் **கி.மு. 2333** இலேயே தன்கூன் (Tangun) முடியாட்சியில் கீழ் அரச அமைப்பினை முதல் முதலில் உருவாக்கியது. அகழ்வாய்வுகளின் தகவல்படி மஞ்சூரியர் களும், சேர்பியர்களும் கி.மு மூன்றவாது மிலேனிய காலப்பகுதியில் இப்பகுதியை கைப்பற்றி ஆட்சி செலுத்தியதாக கூறப்படுகின்றது. அப்போது மூன்று பிராந்திய முடியாட்சிகளை ஏற்படுத்திய தாகவும் அவை முறையே Koguryo shilla மற்றும் Paekche. இம் மூன்று இராட்சியங்களிலும் shilla முடியரசானது பொருளாதாரத்திலும், கலாசாரத்திலும், முதன்மை பெற்ற இராட் சியமாக அமைந்ததுடன் பௌத்தத்தினை பின்பற்றிய இராட்சிய மாகவும் விளங்கியது. இதன் தலைநகரமாக Kyongju விளங்கியது. இத்தகைய பலத்தினால் ஏனைய முடியாட்சி பிராந்தியங்கள் மீது செல்வாக்கு செலுத்த ஆரம்பித்தது. இதன் பயனாக கி.பி. 668 க்கும் 1000 ஆண்டுக்கும் இடையில் மூன்று இராட்சியங்களையும் ஒன்றிணைத்து அரசாக உருவாக்கியது Shilla இராட்சியம். Shilla பேரரசின் வெற்றிக்கான முடியாட்சியாளராக koryu மற்றும் chosun (1932 –1910) விளங்கினார். இதில் chosun இன் காலப் பகுதியிலேயே இப்பிராந்தியம் முழுவதற்குமான அதிகாரத்தை

இழக்க ஆரம்பித்தது. அக்காலப்பகுதியிலேயே சீனர்களும், மொாங் கோலியர்களும் பின்னர் ஜப்பானியர்களும் இப்பிராந்தியத்தை கைப்பற்றி தமது ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்தனர். இக்காலப் பகுதியில் கென்பூசியத்தினை கைவிட்டு பௌத்தத்தின் பிடிக்குள் அகப்பட்டது. பௌத்த மெய்யியலுக்குள்ளால் ஜப்பானிய ஆதிக்கம் வளர்ச்சியடைந்தது. கொரியா முழுவதும் பௌத்த தத்துவம் பரவலடைந்தது.

1910 இல் ஜப்பானிய நேரடி காலனித்துவ நாடாக மாறிய கொரிய தொழில் துறையிலும் கைத்தொழிலிலும் இரட்டிப்பு வளர்ச்சியை எட்டியது. வடக்குப் பகுதி. தென் பகுதி விவசாயம் வர்த்தகம் ஆகியவற்றில் தீவிர வளர்ச்சியை அடைந்தது. அதே நேரம் 1876 இல் மேற்குலக நாடுகளுடன் கொரியர்கள் வர்த்தகத்தில் அதிக ஈடுபாடு கொண்டு வெற்றிகரமான வர்த்தக உறவையும், அதற்கான கட்டுமானத்தினை உள்நாட்டிலும் ஏற்படுத்தியிருந்தனர். இது ஜப்பானுக்கு வாய்ப்பான சூழலை ஏற்படுத்தியிருந்தது. ஜப்பானிய காலனித்துவக் கொள்கையின் கீழ் 75 சதவீத விவசாய உற்பத்தி யாளர்களாகிய கொரியர்கள் விவசாயத்துறைசார்ந்து பேணி யதுடன் நிலக்கரி அடங்கிய இயற்கைப் பொருட்களின் ஏற்று மதியினை முதல்தர கைத்தொழில் துறையாக உருவாக்கினர். புகையிரதப் போக்குவரத்திற்காக கட்டுமானத்தை ஜப்பான் தனது சொந்த தொழில் நுட்பத்தினைக் கொண்டு கட்டி வளர்த்தது. இவ்வாறு நிர்வாகம், வர்த்தகம், தொழில்துறை என்பனவற்றை ஜப்பான் திறம்பட கட்டி வளர்த்தாலும் அதன் குடியேற்றவாதக் கொள்கைகளால் அடிமையாக்கப்பட்ட கொரியர்கள் 1919 இல் ஜப்பானுக்கு எதிரான ஆயுதப் புரட்சியில் ஈடுபட்டனர். முதலாம் உலக யுத்த சூழலும் ஜப்பானின் மீதான நடவடிக்கை கொரியர்களுக்கு சாதகமானதாக அமைந்தது. இதன் பயனாக சீனாவின் ஒத்துழைப் புடன் கொரிய அரசாங்கம் அமைக்கப்படுகிறது. 1924 இல் கொரியன் கம்யூனிஸ்ட் கட்சி மறைமுகமான ஆயுதப் போராட்டத் தினை ஊக்குவித்து தாக்குதல்களை செய்யுமளவிற்கு வளர்ச்சி

யடைகின்றது. 1937களில் சமதளத்தில் பொருளாதாரத்திலும் கனியவள கைத்தொழிலிலும் அதிக கவனம் செலுத்துவதுடன் வேலைவாய்ப்பினை நோக்கிய நகர்வுகள் வேகமான தொழில்துறை வளர்ச்சிக்கு காரணமாக அமைகிறது. பொருளாதாரத்தில் வேகமான வளர்ச்சியை கொரியர்கள் அடைந்தார்கள்.

1942 இல் அமெரிக்கா, பிரிட்டன், சீனா, ஆகிய நாடுகளின் தலைவர்கள் கொரியாவின் சுதந்திரத்திற்கான முன்மொழிவுகளை பிரகடனப்படுத்தினார்கள். 10 ஆகஸ்ட் 1945 இல் சோவிய ரஷ்யாவின் படைகள் கொரிய மக்கள் விடுதலைக்கு ஆதரவாக இறக்கப்பட்டன. இதேயாண்டு 08 செப்ரெம்பர் அமெரிக்கப்படைகள் தென் கொரியாவுக்கு ஆதரவாக தரை இறக்கப்பட்டன. இரண்டு வல்லரசு இராணுவத்தாலும் சில வாரங்களுக்குள் கொரியப்பகுதி முழுவதும் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாக்கப்பட்டது. (Euphoria) ஜப்பானிய இராணுவம் இரு வல்லரசுகளின் படைகளிடமும் சரணடைந்தன. இரு வல்லரசு நாடுகளின் படைகளும் 38 அட்சரக் கோட்டில் சந்தித்தன. இதனையே வட - தென் கொரியாக்களின் எல்லையாக வரையப்பட்டதுடன் இரு வல்லரசுகளின் ஆதரவுடன் வட – தென் கொரியாக்களில் சுதேச அரசுகள் உருவாக்கப்பட்டன. இரு வல்லரசுகளும் வட - தென் கொரியாவை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட புரிந்துணர்வு 1946 மேயில் தோல்வியடைந்தது. விரைவாக மோதலுக்கான தயார்படுத்தலும் தாக்குதலுக்கான முன்னரங்குகளும் எல்லைக் கோட்டில் தயாரானது. 1948 பின்பு வட தென் கொரியாவுக்கான தனித்தனிப் படைகளும் ஆட்சிகளும் உருவாகியது. 1950 இல் இருகொரிய ஆட்சிகளும் உருவாகியது. 1950 இல் இரு கொரியர்களுக்கும் இடையில் பாரிய யுத்தம் ஆரம்பமானது. இது 1953 வரை நீடித்தது.

வடகொரியா சோவியத் ஆதரவுடன் **கில்ம் – இல் – சுங்** (Kim – il – sung) தலைமையிலான அரசு அமைக்கப்பட்டது. சோவியத்தின் சோஸலிஸக் கொள்கைக்கு அமைவாக கில்ம் வடகொரியாவை மீளமைப்பதில் கவனம் செலுத்தினார். குறிப்பாக நிலத்தினை

முதன்மையாகக் கொண்ட அதிகார வர்க்கத்தின் கட்டுமாணத்தை உடைத்து புதிய வகைக்குள் வடகொரிய சமூகக்கட்டமைப்பை வரைந்தார்.கைத்தொழிலை தேசிய மயமாக்கினார். இல்மன்ஆப்சியின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டதுடன் சமூகங்கள் பொதுவுட மைக்கு ஏற்ப சொத்துக்களின் பகிர்வும் உற்பத்தியின் பங்கெடுப்பும் வளர்க்கப்பட்டது

சோவியத் படைகளின் பிரவேசத்திற்கு பின்பு ஜனநாயக மக்கள் கொரியக்குடியரசு (People's Democratic Rupublic of Koria) எனப் பிரகடப்படுத்திய கில்ம் அரசாங்கம் 1946 பெப்ரவரியில் வட–கொரியாவுக்கான மக்கள் மன்றத்தினை உருவாக்கியது. அதன் மூலம் 1947 பெப்ரவரியில் சுப்ரீம் மக்கள் அவையை (Koria for Supreme people's Assembly) அமைப்பதற்கான தேர்தலை நடாத்தியது. இது ஏறக்குறைய சோவியத் யூனியனின் கம்யூனிஸக் கட்சியின் பிரகாரம் அமைக்கப்பட்ட கட்டமைப்புக்களாகவே அமைந்தன. வட கொரியா ஒரு சோசலிஸ கட்டமைப்புக்கான திட்டமிடலை வரைந்து கொண்டது. 1948 டிசம்பரில் சோவித் துருப்புக்கள் கொரியாவிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டன.

கொரிய யுத்தத்திற்கான முதன்மைக்காரணமாக அதன் புவிசார் அரசியல் பரிமாணம் காணப்பட்டதென கூறமுடியும். குறிப்பாக **சோவியத் ரஷ்யாவையும், சீனாவையும் ஒரு பக்க எல்லையாக கொண்டிருந்த கொரியா அந்த நாடுகளின் நலன்களுக்கு கட்டுப் படும் என்ற நிலையை தடுப்பதற்காக அமெரிக்கா ஜப்பான் போன்ற முதலாளித்துவ அரசுகளின் கொரியா மீதான பிரவேசம் அமைந்தது.** இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த தறுவாயில் இந்த யுத்தம் பனிப் போருக்கான வடிவத்தினை கட்டியம் கூறிவருகின்றது எனலாம். வல்லரசுகள் நேரடி மோதலைத் தவிர்த்துக் கொண்டு தாம் சார்ந்த நாடுகள் மூலம் யுத்தத்தினை நிகழ்த்தும் போராக பனிப் போர்க்காலம் அமைந்தது. அதுவே வட–தென்கொரிய யுத்தத்தில் காணப்பட்டது.

1950 இல் வடகொரியாவின் நிறுவகத் தலைவரான கில்ம் நம் தந்தையர் தேசத்தை இணைப்போம் எனும் போர் முழுக்கத்துடன்

வடகொரியப் படைகளைத் தென்கொரியாவுக்கு அனுப்பி மூன்று நாட்களுக்குள் தென்கொரியாவின் தலைநகரான சியோல் உட்பட பெரும்பாலான பகுதிகளைக் கைப்பற்றினார். இதற்கு எதிராக அமெரிக்கா ஐ.நா சபை மூலம் தென்கொரியாவை மீட்டும் சண்டை யில் ஈடுபட்டது. அதன்பின்பு வடகொரியாவுக்கு ஆதரவாக 1949 இல் புரட்சி செய்த மாவோவின் சீனப் படைகளும் யுத்தத்தில் இறங்கியது.

இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் விதத்தில் 1953 யூலையில் ஐக்கிய நாடுகள் சபை சமாதான உடன்படிக்கை ஒன்றினை வட– தென் கொரியாக்களுக்கிடையில் மேற்கொண்டது. அதன் பிரகாரம் 4000 மீற்றர் எல்லைப்பகுதி இராணுவ சூனியப் பகுதியாக பிரகடனப்படுத்தியது. (De – militarized butter zone – DMZ). இதனை முழுமையாக ஏற்றுக் கொள்ளாத வடகொரிய இரு கொரியாக் களையும் ஒன்றிணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தது. 1972 இல் வட–தென் கொரியாக்களை ஒன்றிணைக்கும் கூட்டுக் குழுவென்று அமைக்கப்பட்டது. சமாதான பூர்வமான ஐக்கியம் என்ற தொனிப்பொருளில் அத்தகைய முயற்சி ஒன்று மேற்கொள்ளப் பட்டது. ஆனால் 1983 இல் பர்மாவின் (மியான்மார்) தலைநகரான ரங்கூனில் தென்கொரியாவின் நான்கு அமைச்சர்கள் குண்டுவெடிப் பில் கொல்லப்பட்டதும் அதனை வட கொரியாவின் இரு இராணுவ பணி யாளர் நடாத்தியதும் தெரியவந்தது. அத்துடன் DMZ பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ஐ.நா வின் எல்லைக் கோட்டை அண்டிய பகுதியில் வடகொரிய இராணுவத்தினை பலப்படுத்தியது வடகொரியா அரசு.

குறிப்பாக தென்கொரியாவை மீட்க தயாரான ஐ.நாவின் பன்னாட்டுப்படை பதில் தாக்குதலை வடகொரியப் படைகள் மீது நிகழ்த்தியது. ஏறக்குறைய மூன்று இலட்சம் பன்னாட்டுப்படையில் 2.6 இலட்சம் படைகள் அமெரிக்க இராணுவமாக இருந்தன. இத்தகைய பன்னாட்டு படையை அமைப்பதற்கான தீர்மானத்தை ஐ.நா சபையில் முன்வைக்கும் போது சோவியத் யூனியன் ஐ.நா சபையை புறக்கணித் திருந்தது. அதனால் எதிரப்பின்றி தீர்மானம் நிறைவேறியது. இதனால்

பன்னாட்டுப்படைகளின் தாக்குதலானது அமெரிக்க தாக்குதலாகவே அமைந்திருந்தது.

இதன் பிரகாரம் வடகொரியப்படைகளை விரட்டிய பன்னாட்டுப் படை சீனாவின் எல்லையோரத்தில் அமைந்துள்ள யாலு ஆற்றைக் கடக்க முயன்றது. அப்போது சீனச் செம்படை பன்னாட்டுப்படைகளை தாக்க ஆரம்பித்தது. இப்போர் மேலும் இரண்டு வருடம் நீடித்தது. ஐ.நாவின் பன்னாட்டுப்படை பின்வாங்க நேர்ந்தது. இத்தாக்குதலில் ஏறக்குறைய 20 லட்சம் கொரியர்கள் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க நிகழ்த்திய போரில் தென்கொரியாவை விட வடகொரியாவே அதிகமான அழிவுகளை சந்தித்தது. முழுமொத்த சனத்தொகையில் 20 சதவீதத்தினை வடகொரியா இழந்தது. ஏறக்குறைய 6 இலட்சம் தொன் குண்டுகளையும் 3 இலட்சத்திற்கு மேற்பட்ட தொன் இரசாயனக் குண்டுகளையும் அமெரிக்கா வட கொரியா மீது பாவித்ததாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அப்போது அமெரிக்காவின் கொரியாவுக்கான படைத் தளபதி மெக் ஆர்தர் (mac Arthur) கொரிய யுத்தத்தினை அணுவாயுதத்தை பிரயோகித்து கட்டுபாட்டுக்குள் கொண்டுவர அமெரிக்க ஆட்சியிடம் அனுமதி கேட்டதாக தெரியவருகிறது. இவ்வாறு பாரிய அழிவு களையும் இழப்பீடுகளையும் கொரிய யுத்தம் ஏற்படுத்தியது.

## இலங்கையும் வடகொரியாவும்

**1970 15 யூலையில்** வடகொரியா தனது தூதரகத்தினை இலங்கையின் தலைநகராக கொழும்பில் ஆரம்பித்தது. இடதுசாரி கட்சிகளை இணைந்த சுதந்திரக்கட்சியின் கூட்டரசாங்கம் ஆட்சியிலிருந்த போது வடகொரியாவுடனான நெருக்கம் வலு வடைந்தது. இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் இடது சாரி மற்றும் சோஸலிஸ நாடுகளுடன் நெருக்கத்தை ஏற்படுத்திய கூட்டரசாங்கம் கிழக்கு ஜேர்மனி, வடகொரியாவுடன் உடனடியாக ராஜீக உறவை பலப்படுத்தியது. ஆனால் ஏப்ரல் 17 1971 இல்

ஜே.வி.பி. கிளர்ச்சி காரணமாக இலங்கையின் பிரதர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஓர் அறிக்கையின் மூலம் கொரியாவுக்கான தூதரகத் தினை மூடுமாறும் அதிகாரிகளை வெளியேறுமாறும் பணித்திருந்தார்.

இலங்கையிலுள்ள வடகொரியத் தூதரகத்தில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களும், அவர்களது குடும்பத்தவர்களும் இலங்கை அரசாங்கத்தின் சொந்த நலனுக்காக வெளியேற வேண்டும் என அந்த அறிக்கை கூறியிருந்தது.

இவ்வறிக்கையின் பிரகாரம் இரு நாட்டுக்குமான உறவு விரிசலை நோக்கி சென்றது. 1971 ஆம் ஆண்டு இலங்கையில் நிகழ்ந்த ஜே.வி.பி (மக்கள் விடுதலை முன்னணி) இன் கிளர்ச்சிக்கு பின்னால் வடகொரியத் தூதரக அதிகாரிகள் செயல்பட்டதாகவும், வடகொரியா உதவியதாகவும் கருதப்பட்ட நிலையிலேயே தூதரக பணியாளர்களை சிறிமா அரசாங்கம் வெளியேற்றியது. இத்தகைய சந்தேகம் ஆதராபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. அரசாங்கம் அமைத்த விசாரணைக்குழு ஜே.வி.பி களர்ச்சிக்கு எந்தவொரு வெளிநாட்டு சக்திகளின் உதவியும் பெறப்படவில்லை எனக் குறிப்பிட்டது. விசாரணைக்குழுவில் அங்கம் பெற்ற குற்றப் புலன் விசாரணை திணைக்களத்தை சேர்ந்த ஒய்வு பெற்ற மூத்த காவல்துறை கண்காணிப்பாளர் உபாலி செனவிரட்னா இதனைத் தெரிவித்தார். ஆனாலும் ஜே.வி.பி கிளர்ச்சியில் ஈடுபட்ட சில கிளர்ச்சி தலைவர்களும் வடகொரியாவில் பயிற்சிகளை பெற்றனர் என்றும் வெளிநாட்டு நாணயங்கள் இலங்கைக் குள் கொண்டு வரப்பட்டு கறுப்புச் சந்தையில் மாற்றப்பட்டன என்றும் அமெரிக்க – வெளியுறவுக் கொள்கையை வரையறுத்தவர்கள் குறிப்பிட்டனர்.

இத்தகைய முரண்பாடு இரு நாட்டுக்கும் நிலவிய போதும் உறவு நீடிக்குமொன அரசாங்கம் அறிவித்தாக சிறிமாவின் செயலாளர் எம்.டி.டி பீரிஸ் குறிப்பிட்டார். இவ்வாறே 1976 இல் கொழும்பில் இடம்பெற்ற அணிசேரா மகாநாட்டில் கொரியக் குடாவில் நிலவிய

குழப்பத்தினை தணிப்பதற்கு தீர்மானம் முன்மொழியப்பட்டு நிறை வேற்றப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. சுதந்திரமான கொரியாவுக் காகவும் அமைதியான ஒன்றிணைவுக்குமான அழைப்பினை இலங்கை தீர்மானமாக முன்வைத்தது.

இலங்கையில் வலதுசாரி அரசாங்களின் ஆட்சியிலும் தொடர்ச்சியான புதிய உலக ஒழுங்குக்கு பின்பான மட்டுப்படுத்தப் பட்ட உறவே வடகொரியாவுடன் காணப்பட்டது. வர்த்தக ரீதியிலும், இராணுவ ரீதியான ஆயுத தளபாடக் கொள்வனவிலும் உறவு காணப்பட்டது. ஆனால் வடகொரியாவின் அணுவாயுதப் பரிசோதனை தொடர்பில் இலங்கை ஐ.நா சபையின் உறுப்பு நாடு என்ற வகையில் அறிக்கைகளை வெளியிட்டது. 2006 ஆம் ஆண்டு வடகொரியாவின் அணுவாயுத பரிசோதனை தொடர்பில் எதிர்ப்பினை வெளியிட்டது. ஆனால் 2007 இல் ஐ.நா பொதுச்சபையில் வடகொரியா தொடர்பான தீர்மானத் திற்கு ஆதரவாக வாக்களித்த இலங்கை 2008 மற்றும் 2009 இல் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது புறக்கணித்தது 2014 இல் வாக்கெடுப்பில் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தது. 2015`/2016 இல் வடகொரியாவுடன் மனித உரிமை மீறல்களை கண்டித்து முன்வைத்த தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தது.

2014 இல் வடகொரியா தொடர்பான தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தமைக்கு இலங்கையின் பிரதிநிதி பின்வருமாறு விளக்க மளித்தார். "தீர்மானங்கள் எவையும் பயனற்றவை. இந்த விவகாரத்தை பாதுகாப்புச் சபையானது அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வதற்கு உந்துதல் அளிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது" என்றார்.

எனவே இலங்கை வடகொரியா பொறுத்து தளம்பல் கொள் கைக்கான காரணம் தமிழருக்கு எதிரான போர்குற்ற விடயம். இலங்கையையும் பாதிக்கும் என்ற வகையில் பார்க்கப்பட்டதே யாகும். 2015 வரையும் இலங்கையில் அதிதீவிர சீனச்சார்ப்பு ஆட்சி

நிலவியதும் அக்காலப்பகுதி தீர்மானத்திற்கு காரணமாக அமைந்தது. அவ்வாறே அமெரிக்க சார்பு ஆட்சி அல்லது அமெரிக்கா சார்ந்த மேற்குலகத்தினை கையாளும் ஆட்சி என்ற அடிப்படையில் 2017 அறிக்கை வடகொரியாவுக்கு காட்டமானதாக அமைந்தது. அதேநேரம் வடகொரியாவுடனான வர்த்தகத்தை தொடர்ந்து இலங்கை பேணி வருகிறது. ஐ.நாவின் தடையையும் மீறி அத்தகைய நிலைப்பாட்டை இலங்கை பராமரிப்பது நெருக்கடி மிக்க அரசியலுக்கு அடிப்படையாக அமைந்தது.

வடகொரியாவிடமிருந்து இரும்பு உருக்கு நிலக்கரி உள்ளிட்ட பொருட்களை இலங்கை இறக்குமதி செய்வதாக ஐ.நா கண்காணிப் பகம் அறிக்கை ஒன்றில் தெரியப்படுத்தியிருந்தது. குறிப்பாக தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்பு காலக்கிரமாக இறக்குமதி வர்த்தகம் வடகொரியாவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் வட கொரியாவின் கப்பல் நவீனமயப்படுத்தும் கிறீன்பைன் கம்பனியின் இரு பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்ததாகவும் போர்க் கப்பல்களை விற்பனை செய்ய முயன்றதாகவும் ஐ.நாவின் கண்காணிப்பு அறிக்கை தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

வடகொரியா விடயத்தில் இலங்கை எப்போதும் சரியான முடிவு களை எடுக்கத் தவறுகின்றது. முன்பின் முரணான தீர்மானங் களால் வடகொரியாவுடன் உறவு பாதிக்கும் என்பதனை விட இலங்கை வெளியுறவுக் கொள்கை ஆட்சியிலிருக்கும் அரசாங்கங்கள் சார்ந் திருக்கும் வல்லரசுகளுக்கு இசைவாக நடந்து கொள்வதால் ஏற் படுகிறது. இன்னோர் வகையில் கூறுவதாயின் வடகொரியாவுடனான உறவைப் பலியிட்டாவது தமது அரசாங்கத்தின் அதிகாரத்தை பாதுகாக்க இலங்கை ஆட்சியாளர்கள் எல்லாக் காலமும் முனைந்து வருகின்றனர்.

## வடகொரியப் பொருளாதாரம்

வடகொரிய விவசாய நிலத்தினை குறைந்தளவில் கொண்டி ருந்தாலும் விவசாயமே பிரதான உற்பத்திப் பொருளாதாரமாகக்

காணப்பட்டது. ஜப்பானின் குடியேற்ற நாடாக விளங்கிய போது கைத் தொழில் உற்பத்தியின் பங்கினைமுதன்மைப்படுத்திக் கொண்டது. நிலக்கரி, உருக்கு, அதன் பிரதான ஏற்றுமதியாக உள்ளது.

கொரிய யுத்தத்திற்கு பின்னர் அடுத்து வந்தத சகாப்தத்தில் பாரிய வளர்ச்சியை நோக்கி வடகொரியப் பொருளாதாரம் சென்றது. ஆண்டென்றுக்கு 25 சதவீதத்தில் வளர்ச்சி அடைந்தது. 1965 – 1978 வரை ஆண்டொன்றுக்கு 14 சதவீதமாக விளங்கியது. 1960 களில் சீன – சோவியத் முரண்பாட்டின் போது வடகொரியா சீனாபக்கம் சாய்ந்துகொண்டது. இருந்தபோதும் சோவியத் யூனியன் வர்த்தக அளவை வடகொரியாவுடன் குறைத்துக் கொண்டாலும் மட்டுப் படுத்திய அளவில் பின்பற்றி வந்தது. பனிப்போர் காலம் முழுவதும் வடகொரியப் பொருளாதாரம் வளர்ச்சி முகத்தைக் கொண்டதாக அமைந்தது. புதிய உலக ஒழுங்குக்கு பின்பான காலப்பகுதி அமெரிக்கா – வடகொரிய உறவில் ஏற்பட்ட தீவிர முரண்பாடு வடகொரியப் பொருளாதாரத்தை நெருக்கடிக்குத் தள்ளியது.

1990 களில் கடும்பஞ்சம் நிலவியதாகவும் அப்பட்டினியில் 20 இலட்சம் பேர் வரை அழிந்து போனதாக ரைம்ஸ் பத்திரிகை செய்தி யாளர் டொனால்ட் மெக்கின்டயர் குறிப்பிட்டார். 1995 முதல் ஐ.நாவின் உலக உணவுத் திட்டத்தின் (WFP) கீழ் உள்ளடக்கப் பட்டுள்ளது. வடகொரியா. ஏறக்குறைய 13 ஆட்சிப்பகுதிகளில் 19 இலட்சம் மக்களுக்குஉலகஉணவுத் திட்டத்தின் கீழ் உணவு வழங்கப் படும் நிலைக்கு உள்ளானது. 2004 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் 40 சதவீதகுழந்தைகளும் 30 சதவீததாய்மாரும் ஊட்டச்சத்துகுறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் ஐ. நா குறிப் பிடுகிறது.

இதேநேரம் சீனாவுடனான வர்த்தக உறவு வடகொரியாவுக்கு மிகப் பலமானதாக உள்ளது. இருநாட்டுக்குமான எல்லையானது அத்தகைய பொருளாதார உறவை இலகுபடுத்தியுள்ளது. ஆண்டொன்

றுக்கு 5 பில்லியன் டொலர் வர்த்தகம் நிகழ்ந்து வருகிறது. சீனா போன்றுஆரம்பகாலத்தில் முன்னாள் சோவியத் யூனியனும் அதிக வர்த்தக உறவை வடகொரியாவுடன் பேணி வந்தது. ஜப்பான் தென் கொரியா மட்டுமன்றி ஈரான், சவூதி அரேபியா போன்ற நாடுகளுடனும் வர்த்தக உறவை பேணியதுடன் 1990 களில் 4.2 பில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகத்தினை சர்வதேச மட்டத்தில் பேணிய நாடு வடகொரியா என்பது கவனிக்கத்தக்கது. 1991 இல் இதன் போக்கு பாரிய வீழ்ச்சியை சந்தித்தது. சர்வதேச வர்த்தகம் 2.7 பில்லியன் அமெரிக்க டொலர் வீழ்ச்சிகண்டது. சோவியத் யூனியனது சரிவு அமெரிக்காவின் தலைமையிலான எழுச்சி வடகொரியாவுடனான வர்த்தகத்தினை பாதித்தது. இதன் பின்பு சீனாவிடம் அதிகமாக வட-கொரியா தங்கியிருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டது. சீனாவும் வட-கொரியாவுடனான வர்த்தக இறக்குமதியை 1990 களின் பிற்பகுதி யில் குறைக்கஆரம்பித்தது. இயற்கைஅழிவுகளும் வடகொரியாவின் உற்பத்தியைப் பாதித்தது. குறிப்பாக விவசாயமும், கைத்தொழிலும் இயற்கை அனர்த்தத்தினால் நேரடியாக பாதித்தன. 1990 களின் மத்தியில் ஏற்பட்ட பாரிய இயற்கை அழிவே வடகொரிய உற்பத்தி மட்டத்தை வீழ்ச்சிக்கு கொண்டு சென்றது.

1965 களிலிருந்து வளர்ச்சிப் போக்கில் அமைந்த தேசிய உற்பத்திமட்டம் (UNP) 1990 களுக்கு பின்பு வீழ்ச்சி போக்கினைக் காட்டியுள்ளது. 1992 இல் வளர்ச்சிவிகிதம் 6.0 காணப்பட்டது. 2002 இல் 1.2 சதவீதமானது. இப்போக்கு 2010 களில் மேலும் வீழ்ச்சியை நோக்கியது. 2012 களுக்கு பின்பு 0.17 சதவீத வளர்ச்சி மீளகாணக் கூடியதாக அமைந்தது. அதே சந்தர்ப்பத்தில் வடகொரியா வர்த்தகத்திலும், சந்தை நடவடிக்கையிலும் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரத்திலும் கவனம் செலுத்தியது.

வர்த்தகத்தைப் பொறுத்தவரை 1970 களின் நடுப்பகுதிவரையும் ஜப்பான் மற்றும் மேற்குநாடுகளுடனும் சீனா,சோவியத் யூனியனுடனும் சமஅளவிலானபோக்கினைகடைப்பிடித்தது. 1 பில்லியன் அமெரிக்க

டொலர் வர்த்தகத்தினை இரு தரப்புடனும் மேற்கொண்டுவந்தது. 1980களின் ஆரம்பத்தில் இதரஆசிய,ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளுடனும் பின்பற்ற ஆரம்பித்தது.

இதனால் வடகொரியாவுக்கான நேரடி முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் முதன்மைப்படுத்தப்பட்டது. 1984 இல் முயற்சிகள் தோல்வியடைந்த போதும் 1991 களில் விசேட பொருளாதார வலயங் களை ஜப்பானிய கம்பனிகளின் உதவியுடன் ஆரம்பித்தது. குறிப்பாக Rajin – sonbong பொருளாதார வர்த்தக வலயத்தை ஆரம்பித் தது. குறிப்பாக Tumen River பிரதேச அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுத்தது. 1992 இல் புதியசட்ட வரைபுகளை நேரடி முதலீட்டுக் கான வாய்ப்புக்களை அதிகரிக்கும் வகையில் வடகொரியா மேற் கொண்டது. இதன் பின்பு சீனா, ஹொங்கொங், ஜப்பான்,தென் கொரியா, ரஷ்சியா, அவுஸ்திரேலியா, மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடு களிலிருந்து 35 கம்பனிகள் நேரடி முதலீட்டை வடகொரியாவில் ஆரம்பித்தன. இதன் வளர்ச்சித் தன்மையானது அமெரிக்க தலைமை யிலான ஒற்றைமைய உலகம் உருவான பின்பு நெருக்கடிக் குள்ளானது. ஆனாலும் அனேக நாடுகளுடனான பொருளாதார உறவினை வடகொரியா தொடர்ந்து பேணி வருகிறது. வடகொரியப் பொருளாதாரம் பற்றிய சமகால உரையாடல்கள் குறிப்பிடுவது போன்று அதன் உண்மை நிலை இல்லை என்றே குறிப்பிடலாம். உணவு நெருக்கடியை தீர்த்துக் கொள்வதற்கு நாடுகளை மட்டுமன்றி ஐ.நா வின் உலக உணவுத்திட்டத்திலும் அதன் உப நிறுவனங்களிலும் வடகொரியா உதவிகளைப் பெற்று வருகிறது.

## வடகொரியா-அமெரிக்க முரண்பாடும் புவிசார் அரசியலும்

2018 இல் வடகொரியா புதிய ஐதரசன் குண்டு ஒன்றினை விருத்தி செய்திருப்பதாக தெரியவந்தது. இதனை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையுடன் இணைத்துக் கொள்ள முடியு மெனவும் அறிவித்தது. இது பிராந்திய சர்வதேச மட்டத்தில் அதிகமான அதிர்ச்சியினை ஏற்படுத்தியது. இதன் விளைவாக கொரியப்

பிராந்தியத்தில் பதட்டம் அதிகரித்தது.

வடகொரியாவின் அணுவாயுதப் பரிசோதனையின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதுடன் அண்மையில் வடகொரிய ஏவுகணை ஒன்று ஜப்பானின் வான் பரப்புக்கு மேலால் சென்று ஜப்பானியக் கடலில் வீழ்ந்து வெடித்துள்ளது. அமெரிக்க நிலப்பரப்பை இலக்கு வைத்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையினை யும் பரிசோதித்துள்ளது. அதில் ஐதரசன் குண்டினை காவிச் சென்று தாக்க முடியு மெனவும் தெரியவருகிறது.

இவை அனைத்தும் வடகொரியாவின் பலமாக உள்ளது. இதனைவிட வடகொரிய மக்களும் தலைமையின் நடத்தையினை யும் எதிரி நாட்டினைத் தாக்கும் திறனின் விருத்தியினையும் ஊடகங்களுடாக பார்த்து பாராட்டி வருகின்றனர். ஐதரசன் குண்டு பரிசோதனை வெற்றியை அந்த நாட்டு மக்கள் தொலைக்காட்சியில் பார்த்து வரவேற்றுள்ள காட்சி பதிவாகியுள்ளது.

இவற்றுடன் பிராந்திய மட்டத்தில் இரண்டு பிரதான நாடுகளான சீனாவும், ரஷ்யாவும் அண்மைக்காலமாக வடகொரியாவை ஆதரித்து வருகின்றன. வடகொரியாவுக்கு எதிரான இராணுவப் பயிற்சியையும், ஒத்திகைகளையும் அமெரிக்கா தென்கொரியா மேற்கொண்டு வருகிறது. இத்தகைய பயிற்சியின் போது ரஷ்யாவின் போர் விமானங்கள் கொரிய தீபகற்பத்திற்கு மேலால் பறந்து சென்றன. இத்தகைய சம்பவம் வடகொரியாவின் பலத்தை அதிகரித்துள்ள தென்பதுடன் ரஷ்யாவின் நேரடி ஒத்துழைப்பு உண்டு என்பதை உணர்த்தியுள்ளது. ரஷ்ய ஜனாதிபதி வினாடிமிர் புடின் வடகொரியாவை மிரட்டி பணிய வைக்க முடியாது என எச்சரித்துள்ளமை வட கொரியாவின் பலத்தை அதிகரித்துள்ளது.

இது விடயத்தில் வடகொரியா தலைவர் ஹிம், ஜோங் உன் ரஷ்ய ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் முக்கியமானது. வடகொரியாவின் இவ்வகை எச்சரிக்கை கடிதம் சிறப்பு தூதுவரின் மூலம் நேரடியாக புட்டினிடம் கையளிக்கப்பட்டது. அதில் அமெரிக்கா

வின் முக்கிய நகரங்களை குறிவைத்து எந்த நேரத்திலும் அணு வாயுதங்களால் தாக்குதல்களை முன்னெடுக்க வடகொரியா தயாராக உள்ளது எனக் குறிப்பிடப்பட்டது.

அமெரிக்க விமானங்கள் வடகொரியாவின் வான் பரப்பில் தாழ்வாகப்பறந்தமை சர்ச்சையை தந்த செய்தியாகும். அமெரிக்கா தனது இறைமையை மீறியுள்ளதாகவும் பதிலுக்கு வடகொரியா எச்சரித் திருந்தது. ஆனால் இவ்வாறு அமெரிக்கா நடந்து கொள்வதற்கு காரணம் எதுவாக அமைந்தது என்பது கவனிக்கத்தக்கது. இன்றைய உலகம் **கணணிபோர்** (Cyber war) என்பதற்குள் நகர்கின்றது. இதில் தான் அமெரிக்காவின் ஆத்திரம் அதிகரிக்க முதல் காரணமாக அமைந்தது. அதாவது வடகொரிய தொழில் நுட்பத்தின் திறனால் தென்கொரியாவில் அமெரிக்காவும் இணைந்து தயாரித்த போர் பயிற்சித் திட்டங்கள் மற்றும் வடகொரியாவையும் அதன் தலை மையையும் பணியவைக்கும் உத்திகள் அடங்கிய திட்டங்களை வடகொரியாவின் ஹக்கர்கள் கைப்பற்றிவிட்டதாக தென்கொரிய நாடாளுமன்ற உறுப்பினரான ரீ.சியொல் தெரிவித்தார். இது பற்றிய தகவலை உறுதிப்படுத்த அமெரிக்க பாதுகாப்பு மையமான பெண்டகனை நாடியபோது எந்தகவலும் தர மறுத்ததாக செய்தி ஊடகங்கள் உறுதிப்படுத்தியிருந்தன. இதன் மூலம் அமெரிக்காவின் நடவடிக்கை தெளிவாக தெரிகிறது. வடகொரியர்களின் நட வடிக்கை வாயிலாக அதிக அதிர்ச்சியில் டொனாட் ட்ரம்ப் உள்ளார். வடகொரியா இந்தளவுக்கு வளர்ந்துள்ளதா அல்லது சீனாவின் நடவடிக் கையா என்பதே தற்போது அமெரிக்காவின் தேடலாக உள்ளது. எதுவாயினும் அமெரிக்காவின் எல்லைக்குள் புகுந்து தகவலை கைப்பற்றியதென்பது மிக திறமையான நடவடிக்கை என்பதை நிராகரிக்க முடியாது.

அமெரிக்காவுக்கு அதிர்ச்சியான செய்தி ஒன்றின் உறுதிப் படுத்தலை ஜோன் கொப்ன்கின் பல்கலைக்கழகம் மற்றும் செய்– தியாளர் பிற்றர் லைடன் ஆகியோர் விளங்கியுள்ளனர். இவர்களுடன் ஆசிய கிரிபித் பல்கலைக்கழகமும் அத்தகவலை உறுதி செய்தது. அத்

தகவல் வடகொரியாவிடம் நீர்மூழ்கிக் கப்பல் (SSBM) ஒன்று தயாராக உள்ளதெனவும் அது ஏற்கனவே கட்டப்பட்டு முடிந்ததென்றும் அந்த செய்தி அமையமும் பல்கலைக்கழகமும் தெரிவித்துள்ளன. அதில் அணுவாயுதங்களை காவிச் செல்லும் ஏவுகணைகள் உண்டு எனவும் அதற்கான பரிசோதனையை நிறைவு செய்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.செப்ரெம்பர் 21 இல் Sinpo South Shipyard பல்வேறுபட்ட காட்சிப்படங்களை தெரியப்படுத்தியதாக வோசிங்டனை தளமாகக் கொண்டு இயங்கும் கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது. இந்த செய்தியில் உண்மையில்லை என சில தென்கொரிய செய்தி நிறுவனங்கள் குறிப்பிட முயலுகின்றன.

இது அமெரிக்காவின் நடவடிக்கைக்கு உடனடிக்காரணங்களாகக் கொள்ளமுடியும். அது மட்டுமன்றி உலகத்தில் ஒரு போரை ஏற்படுத்தி மீளவும் தனது பலத்தை நிறுவ விரும்புகிறது அமெரிக்கா. அதுமட்டுமன்றி இதுவரையான காலப்பகுதியில் ஐ.நா.வையும் நேட்டோவையும் துணைக்கழைத்துவரும் அமெரிக்கா தற்போது தென்கொரியாவையும் ஜப்பானையும் இணைத்துக் கொண்டு செயல்பட முனைகிறது. அண்மைய நிகழ்வில் கூட ஜப்பான், தென்கொரிய போர் விமானங்கள் எச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபட்டன. குவாம் தீவிலிருந்து அமெரிக்க போர் விமானங்கள் புறப்பட்டு ஜப்பான் வான் பரப்புக்குள் பிரவேசிக்கும் போது இரண்டு ஜப்பான் போர் விமானங்களும் இணைந்தன. இது வடகொரியாவுடனான யுத்தத்திற்குரிய கூட்டணி தயாராகிவிட்டதென்பதை உணர்த்துகின்றது.

அதே நேரம் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் வடகொரியாவை அடக்குவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை பொறுத்து ஆலோசனை நடத்தினார். இத்தகைய அவசர ஆலோசனையில் பாதுகாப்புத்துறை செயலாளர் ஜேம்ஸ் மாட்டிஸ், முப்படைத் தளபதிகளின் தலைவர் ஜோசப் டன்'போர்ட் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். அமெரிக்காவையும் அதன் நட்பு நாடுகளையும் எப்படிப் பாதுகாப்பதென ஆலேசிக்கப்பட்டதாக வெள்ளைமாளிகை அறிவித்தது.

இவற்றை அடுத்து வடகொரியாவின் நான்கு கப்பல்கள் நட மாடவோ துறைமுகங்களில் தரிக்கவோ முடியாதென ஐ.நா. தெரி வித்துள்ளது. குறிப்பாக வடகொரியாவின் பெல்ரெல்–8 ஹவேபான்–6 டோங்சான்–2 மற்றும் ஜிசுன் ஆகிய கப்பல்கள் எந்த துறைமுகத்திற்கும் செல்லக்கூடாது என தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே வடகொரியாவுடன் யுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் அமெரிக்கா உள்ளது என்பது புலனாகின்றது. அதே நேரம் அமெரிக்க ஜனநாயகக் கட்சியினர் சற்று எதிர்ப்பு காட்டுவது போன்றே தெரிகிறது. அமெரிக்காவின் பொருளாதாரத்தினை பாதிப்பதுடன் இதன் மூலம் அமெரிக்காவின் நிதி நெருக்கடி தீவிரமடையுமென பொரு ளாதார வாதிகள் வெளிப்படுத்துகின்றனர். இதேவேளை அமெரிக்கா வின் நடவடிக்கையால் தனது இறைமைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சீனா முறையிட்டுள்ளது. குறிப்பாக தென்சீனக் கடல் பகுதியில் அமெரிக்கா போர்க் கப்பலை அனுப்பியதன் மூலம் தங்கள் நாட்டு இறைமையை அமெரிக்கா மீறியுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது. இது வடகொரியா பொறுத்த விடயமாகவும் சீனா கருதுகிறது. காரணம் இப்பிராந்தியத்தில் தனித்துவமாக ஆதிக்கம் செலுத்திய சீனாவுக்கு அதிக நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது அமெரிக்காவின் நடவடிக்கை. எனவே தான் சீனா தனது இறை யாண்மையை முதன்மைப்படுத்தியுள்ளது. மேலும் தென்சீனக் கடலை யுத்தம் காரணமாக அமெரிக்கா பயன்படுத்தி விடுமென சீனா கருதுகின்றது. அவற்றை விட இந்த யுத்தத்தை தனது விருப்புக்கு அமைவாக நடத்தவேண்டுமென சீனா திட்டமிடுகிறது. இந்த யுத்தத்தில் அமெரிக்காவை முழுமையாக ஈடுபடுத்துவதன் மூலம் அதன் ஆதிக்கத்தை முடிபுக்கு கொண்டுவர முடியுமென கணக்குப் போட்டு சீனாவும் ரஸ்யாவும் செயல்படுகின்றன. இதில் ரஸ்யாவை விட சீனாவே அதிக அக்கறை கொண்டு செயல்படுகிறது.

அமெரிக்க வடகொரிய யுத்தம் நீண்ட காலத்தைக் கொண்ட யுத்தம் எனலாம். கடந்த நூற்றாண்டிலும் இப்படியான ஒரு யுத்தத்தை எதிர் கொண்ட நாடுகள் என்ற வரிசையில் மிக நிதானமானதாக எதிர் கொள்ள இரு தரப்பும் திட்டமிடுகின்றன. கடந்த யுத்தத்திலும் சீனாவே

யுத்தத்தை நிர்ணயிக்கும் சக்தியாகக் காணப்பட்டது என்பதை நினை வில் கொள்ள வேண்டும். **இந்த யுத்தத்திலும் சீனாவே தீர்மான மெடுக்கும் சக்தியாக மாறவுள்ளது.** ஆனால் அன்றய சீனாவும் அமெரிக்காவும் இன்றய நிலையில் வளர்ந்த நிலையில் உள்ள நாடுகள். அனேக யுத்தங்களை எதிர் கொண்டு வெற்றி பெற்ற நாடு என்ற வகையில் அமெரிக்காவின் பலமும் சாதரணமானதல்ல. ஆனால் **இது சீனாவின் பிராந்தியம் என்ற வகையில் அதன் புவிசார் அரசியல் பலம் தனித்துவமானது.**

வடகொரியாவின் அணுவாயுத பலம், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை பலம் ற்போது உறுதிப்படுத்தாத போதும் நீர்மூழ்கியையும் கொண்ட கடல்பலத்துடன் போர் புரிய முனையும் அமெரிக்காவுக்கு இன்னோர் சவால்.

இதே நேரம் அமெரிக்கா தனித்து வடகொரியாவை எதிர் கொள்வதை தவிர்த்து வருகிறது. மறுவளமாக கூட்டணி நாடுகளையும் ஐ.நா சபையையும் துணைக்கு அழைத்துக் கொள்ள முயலுகின்றது. பென்டகன் தலைவர் ஜேம்ஸ் மேடடிஸ் குறிப்பிடும் போது, குவாம் உள்ளிட்ட அமெரிக்க பிராந்திய நாடுகளுக்கோ எங்கள் கூட்டணி நாடுகளுக்கோ ஏதாவது அச்சுறுத்தல் உண்டானால் அது பெரும் இராணுவப் பதிலடி மூலம் பதிலளிக்கப்படும் என்றார். இதன் மூலம் அமெரிக்காவின் நிலை ஏற்கனவே வளைகுடா நாடுகளைக் கையாண்டது போல் வடகொரியாவையும் எதிர் கொள்வதாகும். ஆனால் இதில் ஒரு முரண்பாடு உள்ளது. வளைகுடா போன்று வடகொரியாவை கையாள முடியுமா என்பதேயாகும் **புதிய உலகு ஒழுங்கு உருவான போது அமெரிக்காவின் ஆதிக்கத்துக்குள் அரசுகள் கட்டுப்பட்டே செயல்பட்டன. குறிப்பாக ரஷ்யா அமெரிக் காவுடன் இசைந்து செயல்பட்டது. சீனா மௌனம் காத்தது. அதனால் ஆப்கானிஸ்தான்,ஈராக், லிபியா என வரிசையாக ஆட்சியாளர் களையும், அரசுகளின் மரபையும், அவற்றின் வரலாற்றுப் பொக்கிசங் களையும் அழித்து அமெரிக்கா முதன்மை நாடானது. சதாம் உஸைன் முகமட்டு கடாபி மற்றும் பின்லேடன் போன்றவர்களை அழித்தனால்**

**அமெரிக்கா இலக்கம் ஒன்று என்ற முதல் வல்லரசானது. அத்தகைய சூழல் இன்று இல்லை. இந்த முரண்பாடு அமெரிக்க புலனாய்வாளர்களுக்கும், இராணுவத்திற்கும் நன்கு தெரியும்.**

**வடகொரியாவின் ஆயுதங்கள் அசலானவை என்பதில் வேறு கருத்திற்கு இடமில்லை. சதாம் உசைனிடம் இரசாயன ஆயுதங்கள் எனப் பொய்கூறிக் கொண்டு யுத்தத்தை புரிந்தது போல் வடகொரியா மீது தாக்குதல் செய்யமுடியாது. இதனால் ஐ.நா.சபையூடாக தாக்குதலை திட்டமிடுகின்றது அமெரிக்கா. அதில் ரஷ்யாவையும், சீனாவையும் இணைத்துக் கொண்டு செயல்பட விரும்புகிறது.**

ஐ.நா பொதுச் செயலாளர் அணுசக்தி சோதனை விதி முறையை மீறும் ஒரே நாடு வடகொரியா என குறிப்பிட்டார். பிரான்ஸ், அமெரிக்கா போன்ற வல்லரசுகள் எப்படியான விதிகளை பேணுகின்றன என்பது தார்மீக கேள்வியாகும். இதற்கு புதிய செயளாளர் பதில் கூறுவரா என்பது சந்தேகமானது தான். அமெரிக்காவின் பிரதான முயற்சி தனித்து போரிட முடியாது என்பதனை உணர்ந்து உலகம் ஒரு யுத்தத்தை எதிர் கொள்ள தயராக்குகின்றது. அதில் சீனா பிரதான பங்களியாக்க வேண்டுமென விரும்புகின்றது.

**இதே நேரம் சீனாவின் அணுகுமுறையே அமெரிக்காவை மட்டும் யுத்தத்தில் தள்ளுவதாகும்.** அதற்காகவே தென்கொரியாவை கையாள ஆரம்பித்துள்ளது. ஜப்பான் சீனாவை நிராகரித்த போதும் பொருளாதார ஒத்துழைப்பு ரீதியாக சீனாவுடன் நட்புக் கொண்டிருக் கிறது. ஆனால் **சீனா 2000 ஆம் ஆண்டுக்கு பின்பு தனது கட்சி அரசியல் கொள்கையில் மென் அதிகாரத்தினை இணைத்துள்ளமையால் தவிர்க்கமுடியாது மென் அதிகார உத்திகளை தொடர்ந்தும் பலமாக கடைப்பிடித்து வருகிறது.**

இன்றைய உலகத்தில் பெரும் வல்லரசுகள் மென் அதிகாரத்தை கடைப்பிடிக்க முயன்றாலும் சீனா போன்று கடைப்பிடிக்க முடியாதுள்ளது. எல்லா நாடுகளும் யுத்தம் ஒன்றை

தொடுவதற்கு முனைகின்றன அல்லது யுத்தத்தை திட்டமிட்டு நடாத்த தயாரிக்கப்படுகின்றன. வன் அதிகாரத்தின் பலத்திலேயே மென் அதி காரத்தை வெளிப்படுத்த முடியுமென்ற வாதம் மூன்றாம் நிலை வாதமாக அமைந்தாலும் அதனையே வல்லரசுகள் கடைப்பிடிக்கின்றன.

ஒப்பீட்டடிப்படையில் சீனா முதன்மை பெற்றாலும் சீனாவும் ஆயுதங்களையும் போர் உத்திகளையும் வகுக்க தவறவில்லை. **வன் அதிகாரமும் மென் அதிகாரமும் கலந்த ஒன்றிணை Smart Power என்று குறிப்பிடமுடியும். மென் அதிகாரம் பற்றிய சிந்தனை வன் அதிகரித்தளத்திலேயே கட்டியெழுப்ப முடியும் என கோட் பாட்டாளர்கள் வாதிடுகின்றனர்.**

இதனையே அமெரிக்கா கடைப்பிடிக்கின்றது. அமெரிக்கா ஒரு Smart Power நாடு என அழைக்கப்படுகின்றது. பெருமளவுக்கு வல்லரசுகளும் அதன் உத்திகளிலுமேயே மென் அதிகாரம் பிரயோகப் படுத்த முடியுமென்ற வாதம் கோட்பாட்டாளர்களிடம் உள்ளது. இதனை கடைப்பிடிப்பதும் வெற்றி கொள்வதும், அத்தகைய வல்லரசுகளது அதிகார பலத்தினாலேயே முடியுமென்பது நியாயமானதாக காணப்படுகின்றது.

இதனால் சீனா தொடர்ந்தும் வடகொரியாவுடன் பேச்சுக்கு திரும்ப வேண்டுமென கோரியதுடன் சுவிஸ்லாந்தினை மத்தியஸ்தம் வகுக்க உடன்பட்டிருப்பதாகவும் குறிப்பிடுகிறது. ஆனால் அமெரிக்கா ஐரோப்பிய யூனியன் நாடுகளையும் வட கொரியாவுக்கு எதிராக பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்த கோரியுள்ளது. ஜேர்மனியின் தலைவர் வெளிப்படையாக பொருளாதார நெருக்கடியையும், போரையும் ஊக்குவிக்கும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். ஐரோப்பிய ஒன்றியம் அத்தகைய நடவடிக்கை எடுக்க வற்புறுத்தும். ஜேர்மனி அமெரிக்காவுடன் போர் எச்சரிக்கையை பகிர்ந்து கொண்டுள்ளது.

இதில் ரஷ்யாவினது நடவடிக்கை அமெரிக்காவை சீண்டு வதாக அமைந்தாலும் மறுபக்கத்தில் வடகொரியாவுக்கு ஆதர வளிக்கும் பட்டியலில் முதலிடத்தை சீனாவுடன் ரஷ்யா பகிர்ந்து

கொண்டுள்ளது. இதுவும் அமெரிக்கா போரை தனித்து நடாத்த அச்சமடைகிறது என்பதை உணர்த்துகிறது. கூட்டாக ஒரு யுத்தத்தை முன்னெடுக்க முயலும் அமெரிக்காவுக்கு ஐ.நா.வும் ஐரேப்பிய யூனியனும் கைகொடுக்க வேண்டும். ஐ.நா. இல் சீனாவும் ரஷ்யாவும் நெருக்கடி கொடுக்கும் என்பதனாலும் அமெரிக்காவின் கூட்டான போர் உத்தியும் நெருக்கடியில் உள்ளது.

எனவே அமெரிக்காவின் போர் உத்திகளை முறியடிக்கும் நிலை ஒரு பக்கம் அமைகின்ற போது வடகொரியாவை தனித்து எதிர்கொள்ளமுடியாத நெருக்கடிக்குள்ளும் அமெரிக்கா தள்ளப் பட்டுள்ளது. அமெரிக்காவிற்கு ஏனைய பிராந்திய அரசியல் இராணுவ முனைப்பினைவிட வடகொரியா முதன்மையாகிவிட்டது. இதனால் அமெரிக்க அதிகமான சிக்கலுக்குள் அகப்பட்டுள்ளது. **வடகொரிய விவகாரத்தை வேண்டுமென்றே சீனா வடகொரியாவை பயன்படுத்திக் கொண்டு நகர்கின்றதா என்பது புதிய சர்சையாக எழுந்துள்ளது. அமெரிக்காவை இழுத்து பொறிக்குள் சீனா சிக்க வைத்து விட்டு தனது பொருளாதார உத்திகளை வெற்றிகரமாக கையாள முயலும் போக்கு மேற்குலக ஆய்வாளர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.**

## வட - தென் கொரிய- அமெரிக்க-அமைதி பேச்சுக்கள்

விளையாட்டினை இராஜதந்திரமாக பயன்படுத்தும் மரபு உலக நாடுகளின் தலைவர்களிடம் காணப்படும் சிறப்பான அரசியலாக பார்க்கப்படுகிறது. 1970 களில் சீனா – அமெரிக்கா உறவை ஏற்படுத்து வதில் விளையாட்டே காரணமாக அமைந்தது அதனை Pink – Pong இராஜதந்திரம் என அழைத்தனர். அத்தகைய ஒரு இராஜதந்திர நகர்வு கொரியத் தலைவர்களிடையே நிகழ ஆரம்பித்துள்ளது.

வடகொரியா மீது அமெரிக்க போர் உத்தியை சரிவர சாத்தியப்படுத்த முடியாத நிலைக்கு சீனா தான் பிரதான காரணம். ஐ.நா வின் தடையை மீறி சீனா — வடகொரியாவுக்கு எண்ணெய்

பரிமாற்றம் செய்தது. இதனை கடந்த ஒக்டோபர் (2017) முதல் அமெரிக்க உளவுத்துறையின் செயற்கைக் கோள் 30 தடவைக்கு மேல் படம் பிடித்தது. இதனை சீனாவின் பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் சென் யாங் மறுத்துள்ளார். அத்தகைய தகவல் முழுவதும் பொய்யானது என மறுத்த போதும் ஊடகங்களில் பிரபல்யமாகியுள்ளது.

ஐ.நா வின் தீர்மானத்திற்கு ஆதரவாக செயற்பட்ட சீனா 90 சதவீதமாக வடகொரியாவுக்கான எணிணெய்யை மட்டுப்படுத்தும் வரையறுக்கும் தீர்மானத்திற்கும் ஆதரவளித்தது. சீனாவின் கொள் கலன் மூலம் கடலில் உள்ள வடகொரியா கப்பல்களுக்கு எண்ணெய் விநியோகிக்கப்படும் காட்சிகளை தென்கொரிய ஊடகங்களே வெளியிட்டுள்ளன. அது மட்டுமன்றி வடகொரியாவின் நான்கு கப்பல்கள் எந்தத் துறைமுகத்திலும் தரித்து நிற்கமுடியாத தடை உத்தரவையும் ஐ.நா விதித்திருந்தது.

இதில் சீனா தரப்புக்குமே அதிகமான நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. அமெரிக்க கூட்டணியின் நீண்ட நாள் குற்றச்சாட்டுக்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளது. டுவிட்டரில் ட்ரம்ப் குறிப்பிடும் போது சீனா கையும் களவுமாக பிடிபட்டது என தெரிவித்துள்ளார். ஆனால் இது உணர்த்தும் செய்தி அமெரிக்காவுக்கு எச்சிக்கையானதாகும். சீனாவின் பின்புலத்திலேயே வடகொரியா செயறப்படுகின்றமை அதன் புவிசார் அரசியல் பலத்தை தவறாக கணக்குப்போட்ட அமெரிக்காவுக்கு ஆபத்தானதேயாகும். சீனாவின் எல்லைக்குள் அமெரிக்காவின் ஆதிக்கம் வளர்வதனை சீனா ஒரு போதும் அனுமதிக்காது என்பதையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

அவ்வாறே சீனா – வடகொரியா எல்லை ஊடாக அனைத்து வடகொரியத் தேவையையும் நிறைவு செய்யும் வலிமை சீனாவுக் குண்டு. அது கடலில் வைத்து எண்ணெய்யை பரிமாற்றம் செய்ய வேண்டும் என்பதன் அவசியப்பாடு விளங்கிக் கொள்ள முடியா துள்ளது. தகவல் எதிரி நாட்டுக்கு சரிவர பரிமாற்றப்பட வேண்டும்

என்ற நோக்கமோ அல்லது எண்ணெய்யை இலகுவாக அவ்வாறு தான் பரிமாற்ற முடியுமென்பதோ காரணமாக இருக்கலாம் அல்லது சீன பாதுகாப்பு அமைச்சின் தொடர்பாளர் குறிப்பிடுவது போல் பொய்யான தகவலாக கூட அமையலாம். எதுவாயினும் அமெரிக்க கூட்டணிக்கு இது நெருக்கடியான செய்தியே.

இத்தகைய சூழலை கையாளும் தன்மையில் எழுந்ததே குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்கான அழைப்பு. 2018 இல் தென் கொரியாவில் குளிர் கால ஒலிம்பிக் போட்டி நடைபெற இருந்த நிலையில் வடகொரியாவை பங்கேற்க வைப்பதற்கான உயர்மட்ட பேச்சுக்களை நடத்த தென்கொரியா அழைப்பு விடுத்தது. கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெறவுள்ள போட்டியில் வடகொரியாவின் அணி பங்குபற்றியது.

பதற்றமான உறவை சுமூகமாக மாற்றுவதற்கு உதவும் வாய்ப்பாக இது அமையும் என தென்கொரிய ஜனாதிபதி அப்போது குறிப்பிட்டார். இரு நாட்டுப் பிரதிநிதிகளும் சமாதான கிராமமென அழைக்கப்படும் பன்முன் ஜோமில் சந்தித்தார். ஜோமில்லே கொரியர்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுக்களை கடந்த காலத்தில் நடாத்தியுள்ளனர். இது இரு நாட்டுக்குமான எல்லையோரக் கிராமமாகும்.

இருநாட்டிற்குமிடையில் நிறுத்தப்பட்டிருந்த தொலைபேசியுரையாடலை மீண்டும் தென்கொரிய – வடகொரிய தலைவர்கள் ஆரம்பித்தனர். 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிப்பதில் முனைப்பாகவுள்ள இரு நாட்டு தலைவர்களும் கொரியப்பிராந்தியத்தை அமைதியான பிராந்தியமாக மாற்றுவதற்கு உதவு திட்டமிட்டனர்.

இராஜதந்திர உரையாடல்கள் எப்போது அரசுகளிடையே சுமூகத்தன்மையையும் தெளிவான அமைதியான போக்கையும் சாத்தியப்படுத்தும். ஆயுதத்தினால் சாதிக்கமுடியாத அரசியலை இராஜதந்திரம் சாதித்துவிடும் என்பது நினைவுகூரத்தக்கது.

இத்தகைய இராஜதந்திர உரையாடலுக்குப்பின்னால் இரு தரப்பின் மீதான அரசியல் அழுத்தங்களும் சமகால நிர்ணயங்களும் காரணமாக இருக்கமுடியும். வடகொரியத்தலைவர் திரும்பத் திரும்ப அமெரிக்க இராணுவ பலத்துக்கு சமமாக வளர்ச்சியடைவதே தமது நோக்கம் என்கிறார்.அது சாத்தியமானதோ இல்லையோ என்பதல்ல முக்கியம் ஒரு நாடு அத்தகைய முயற்சியில் ஈடுபடத் தயாராகி விட்டதென்பதே சரியான தகவலாகும்.

தென்கொரியத் தலைமை வடகொரியாவை அழிக்கும் நோக்கத்தை கொண்டிராமல் மாறாக ஒரு சுமூகத்தன்மையை நோக்கி நகர்த்துவதாகவும் மிகத் தந்திரமான தலைமையாகவும் விளங்கியிருக் கின்றமை குறிப்பிடத்தக்கது. வடகொரியாவுடன் மோதுவதற்கு தென்கொரியத் தலைமை விரும்பவில்லை என்பது அதன் அறிக்கைகளிலும் பேச்சுக்களிலும் காணக்கூடியதாக இருந்தது.

27.05.2018 இல் வடகொரியாவின் ஆக்கபூர்வமான பதிலை அடுத்து பேச்சுவார்த்தை நடப்பதற்கான சாத்தியப்பாடு இருப்பதாக தனது ட்விட்டர் பக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதி அறிவித்தார். சிங்கப்பூரில் இடம்பெறவுள்ள சந்திப்பை ஆவலுடன் எதிர்பார்த் துள்ளோம். இதில் நிர்ணயிக்கப்பட்ட திகதி, (ஜீன் 12) இடம் ஆகிய வற்றில் எந்தமாற்றமும் கிடையாதுஎன்றுட்ரம்ப் தெரிவித்தார்.

**டொனால்ட் - ட்ரம்ப் - கிம் யொங் உன் உச்சி மாநாடு - சிங்கப்பூர் (2018 ஆனி 12)**

2018 ஆம் அண்டு ஆணி மாதம் 12 ஆம் திகதி திட்ட மிட்டபடி அமெரிக்கா ஜானதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும், வட கொரியா தலைவர் கிங் யொம் உன்னிற்குமிடையில் சிங்கப்பூரில் உச்சி மாநாடு இடம்பெற்றது. உடன்படிக்கை ஒன்றிலும் இருவரும் கைச்சாத் திட்டனர். அணுவாயுதக் களைவு, பிராந்திய நாடுகளிடையே நிலவும் பதட்ட நிலையைக் குறைத்தல் என்பன உச்சி மாநாட்டின் இலக்குகளாக இருந்தன.

வடகொரியாவின் பாதுகாப்பிற்கான உத்தரவாதம், கொரிய தீபகற்பத்தில் முழுமையான அணுவாயுதக் களைவு என்பன உடன்படிக் கையின் அடங்கியிருந்தன.

## முடிவுரை

இந்த ஆளுமைகளிலிருந்து ஈழத் தமிழர் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் அதிகம். வடகொரிய தலைமையின் மிக சாதுரியமான அணுகுமுறைகள் மிக தந்திரமான அரசியலை உணர வைக்கின்றது. **அமெரிக்க வல்லமையை ஒரு சிறிய நாட்டுத் தலைவர் ஒரு அணுவாயுதத்தை வைத்துக் கொண்டு கட்டுப்படுத்துமளவுக்கு வளர்ந்துள்ளார்** என்பது கவனிக்கத் தக்கது. வடகொரியர் பேச்சுக் களில் நெருக்கடியை எதிர் கொண்டாலும் இது வரை அவர்கள் பயணித்த பாதை அந்த நெருக்கடிகளை மட்டுப்படுத்துமென்ற முடிவை–யே தரக்கூடியது.

## வடகொரியா தொடர்பான முக்கிய நிகழ்வுகள்

- 1945 இரண்டாம் உலகப்போரின் இறுதியில் கொரியா தொடர்ந்து ஜப்பானியக் கட்டுப்பாட்டில் இருந்தது. ஜப்பானை சரணடைய வைக்க சோவியத் யூனியன் இராணுவம் கொரியாவை மீட் பதாக இருந்தது. ஆனால் கொரியாவை சோவியத்தின் மேலாதிக்கத் துக்கு விட மேற்கு நாடுகள் விரும்பவில்லை. அமெரிக்க படைகள் தெற்குப் பக்கத்தில் இருந்து மேலாகவும், சோவியத் படைகள் வடக்கு பக்கத்தில் இருந்து கீழாகவும் ஜப்பானை எதிர்த்துப் போராடி சரணடைய வைத்தன. கொரியா 38 Parallel கோட்டில் வடகொரியா சோவியத் சார்பாகவும் தென்கொரியா அமெரிக்கா சார்பாகவும் பிளவுபட்டது.

- 1948 கொரியாவின் இறையாண்மையை உறுதி செய்ய முடியாத அப்போதைய உலக வல்லரசுகளான சோவியத் யூனியனும், அமெரிக்காவும் கொரியாவை பிளவுபடுத்தி வடகொரியா, தென்கொரியா என பிரித்தன. இந்தப் பிரிப்பில் கொரிய மக்களின் அபிலாசைகள் கேட்கப்படவில்லை.

- 1950 இல் வடகொரியா தென்கொரியாவை முற்றிலும் எதிர் பாராத ஒரு தருணத்தில் தாக்கியது. செப்ரெம்பரில் அமெரிக்கா வின் தலையீட்டுடன் வடகொரியா படைகள் பின்வாங்கியது. எனினும் சீனாவின் தொண்டர் படைகளின் தலையீட்டுடன் டிசம்பர் மாதமளவில் அமெரிக்கப் படைகள் போர் நிறுத்தத்தை ஏற்படுத்திக் கொண்டன. ஆனால் இன்றுவரை கொரிய யுத்ததிற் கான சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை.
- 1953 ஆம் ஆண்டு மூன்றாண்டுகள் இடம்பெற்ற கொரிய யுத்தத் தின் பின்னர் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.
- 1985 இலேயே வடகொரியா அணு ஆயுத பரவல் தடை உடன்படிக் கையில் (Nuclear Non – Proliferation Treaty – NPT) ஒப்பமிட்டது. ஆனால் சர்வதேச அணு ஆற்றல் நிறுவனத்தின் ஆய்வுகளுக்கு 1992 இல் தான் இணங்கியது.
- 2002 இல் வடகொரியாவுடனான எல்லா நேரடிப் பேச்சுவார்த்தை களும் நிறுத்தப்பட்டன. புஷ் தீமையின் அச்சில் சூழலும் நாடு என வடகொரியாவை சாடினார்.
- 2002 இல் வடகொரியா தனது நாட்டிலிருந்து சர்வதேச அணு ஆற்றல் நிறுவனத்தின் ஆய்வாளர்களை வெளியேற்றியது.
- 2003 இல் அணு ஆயுத பரவல் தடை உடன்படிக்கை (NTP) யிலிருந்து வடகொரியா வெளியேறியது.
- 2006 வடகொரியா அணுகுண்டு சோதனை நடத்தியது.
- 2009 வடகொரியா அணுகுண்டு சோதனை நடத்தியது.
- 2009 யூன் இல் வடகொரியாவின் ஏவுகணைச் சோதனைகள் அனைத்துக்கும் ஐக்கிய நாடுகள் தடை விதித்திருந்தது.
- 2018 யூன் 12 இல் வடகொரியாத் தலைவர் – அமெரிக்க ஜனாதிபதி பேச்சுவார்த்தை